## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## ஏழாம் பத்து

### பத்தாம் திருமொழி - பெரும்புறக்கடல்
### திருக்கண்ணமங்கை

** பெரும்புறக்கடலை அடல் ஏற்றினைப் *
பெண்ணை ஆணை * எண்ணில் முனிவர்க்கு அருள்
தரும் தவத்தை முத்தின் திரள் கோவையைப் *
பத்தர் ஆவியை நித்திலத் தொத்தினை **
அரும்பினை அலரை அடியேன் மனத்து ஆசையை *
அமுதம் பொதி இன்சுவை *
கரும்பினைக் கனியைச் சென்று நாடிக் *
கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே 1

மெய்ந்நலத் தவத்தைத் திவத்தைத் தரும் *
மெய்யைப் பொய்யினைக் கையில் ஓர் சங்குடை *
மைந்நிறக் கடலைக் கடல் வண்ணனை *
மாலை ஆலிலைப் பள்ளி கொள் மாயனை **
நென்னலைப் பகலை இற்றை நாளினை *
நாளையாய் வரும் திங்களை ஆண்டினை *
கன்னலைக் கரும்பினிடைத் தேறலைக் *
கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே 2

எங்களுக்கு அருள் செய்கின்ற ஈசனை *
வாச வார் குழலாள் மலை மங்கை தன்
பங்கனை * பங்கில் வைத்து உகந்தான் தன்னைப் *
பான்மையைப் பனி மாமதியம் தவழ் **
மங்குலைச் சுடரை வட மாமலை உச்சியை *
நச்சி நாம் வணங்கப்படும்
கங்குலை * பகலைச் சென்று நாடிக் *
கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே 3

பேய் முலைத்தல நஞ்சு உண்ட பிள்ளையைத் *
தெள்ளியார் வணங்கப்படும் தேவனை *
மாயனை மதிள் கோவல் இடைகழி மைந்தனை *
அன்றி அந்தணர் சிந்தையுள்
ஈசனை ** இலங்கும் சுடர்ச் சோதியை *
எந்தையை எனக்கு எய்ப்பினில் வைப்பினை *
காசினை மணியைச் சென்று நாடிக் *
கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே 4

** ஏற்றினை இமயத்துள் எம் ஈசனை *
இம்மையை மறுமைக்கு மருந்தினை *
ஆற்றலை அண்டத்து அப்புறத்து உய்த்திடும்
ஐயனைக் * கையில் ஆழி ஒன்று ஏந்திய
கூற்றினை ** குரு மாமணிக் குன்றினை *
நின்றவூர் நின்ற நித்திலத் தொத்தினை *
காற்றினைப் புனலைச் சென்று நாடிக் **
கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே 5

துப்பனைத் துரங்கம் படச் சீறிய
தோன்றலைச் * சுடர் வான் கலன் பெய்ததோர்
செப்பினை * திருமங்கை மணாளனைத் *
தேவனைத் திகழும் பவளத்தொளி
ஒப்பனை ** உலகேழினை ஊழியை *
ஆழி ஏந்திய கையனை அந்தணர்
கற்பினை * கழுநீர் மலரும் வயல் *
கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே 6

திருத்தனைத் திசை நான்முகன் தந்தையைத் *
தேவ தேவனை மூவரில் முன்னிய
விருத்தனை * விளங்கும் சுடர்ச் சோதியை *
விண்ணை மண்ணினைக் கண்ணுதல் கூடிய
அருத்தனை ** அரியைப் பரி கீறிய
அப்பனை * அப்பில் ஆர் அழலாய் நின்ற
கருத்தனை * களி வண்டறையும் பொழில் *
கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே 7

வெஞ்சினக் களிற்றை விளங்காய் விழக் *
கன்று வீசிய ஈசனை * பேய் மகள் துஞ்ச
நஞ்சு சுவைத்து உண்ட தோன்றலைத் *
தோன்றல் வாள் அரக்கன் கெடத் தோன்றிய
நஞ்சினை ** அமுதத்தினை நாதனை *
நச்சுவார் உச்சி மேல் நிற்கும் நம்பியை *
கஞ்சனைத் துஞ்ச வஞ்சித்த வஞ்சனைக் *
கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே 8

பண்ணினைப் பண்ணில் நின்றதோர் பான்மையைப் *
பாலுள் நெய்யினை மால் உருவாய் நின்ற
விண்ணினை * விளங்கும் சுடர்ச் சோதியை *
வேள்வியை விளக்கின் ஒளி தன்னை **
மண்ணினை மலையை அலை நீரினை *
மாலை மாமதியை மறையோர் தங்கள்
கண்ணினை * கண்கள் ஆரளவும் நின்று *
கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே 9

** கண்ணமங்கையுள் கண்டு கொண்டேன் என்று *
காதலால் கலிகன்றி உரை செய்த *
வண்ண ஒண்தமிழ் ஒன்பதோடு ஒன்றிவை *
வல்லராய் உரைப்பார் மதியம் தவழ் **
விண்ணில் விண்ணவராய் மகிழ்வு எய்துவர் *
மெய்ம்மை சொல்லில் வெண்சங்கம் ஒன்று ஏந்திய
கண்ண! * நின்தனக்கும் குறிப்பாகில்
கற்கலாம் * கவியின் பொருள் தானே 10

அடிவரவு: பெரு மெய் எங்களுக்கு பேய் ஏற்றினை துப்பனை திருத்தனை வெஞ்சினம் பண்ணினை கண்ணமங்கையுள் சிலை

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---